03.02.2026

OS. No. 170/2013

**DW.1 – ஆண்டி**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–</u>**

**இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள அறக்கட்டளைக்கு சொந்தமான வில்லங்கச் சான்றிதழை பார்க்கும்பொழுதே நான் குறைவான விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு விற்று மோசடியில் ஈடுபட்டுள்ள விவரம் தெரியவருகின்றது என்றால் சரியல்ல. டிரஸ்ட்டிற்கு முறையான தீர்மானங்கள் இல்லாமல் சொத்துக்கள் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. மூன்றாம் நபர்களிடம் இருந்து டிரஸ்ட்டிற்கு கடன் வாங்கியபோதும், அதை திருப்பி செலுத்தியதாக சொல்லும்பொழுதும் அதற்குரிய முறையான தீர்மானங்கள் போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு பின்னிட்டு நான்காம் பிரதிவாதியான பிரபுவை அறக்கட்டளை பொருளாளர் பதவியிலிருந்து நீக்கிவிட்டோம் என்றால் சரிதான். அவரை அறக்கட்டளை அறங்காவலர் பொறுப்பிலிருந்தும் நீக்கிவிட்டோம். நான்காம் பிரதிவாதி இருந்த பொறுப்பிற்கு நாங்கள் வேறு யாரரையும் நியமிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த பொறுப்பை நான்தான் செயலாளர் என்ற முறையில் கூடுதலாக பார்த்துக்கொள்கிறேன். அறக்கட்டளை ஆவணத்தில் மாற்றங்கள் எதுவும் செய்து துணை ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தியுள்ளோமா என்றால் ஏற்படுத்தியுள்ளோம். அந்த துணை ஆவணத்தில் பொருளாளர் பணியை செயலாளர் கூடுதலாக கவனிக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், நான் ஆவணத்தைப் பார்த்தால்தான் சொல்ல முடியும். அந்த துணை ../**

ஆவணமானது வருமான வரி விலக்கு பெறுவதற்காகத்தான் ஏற்படுத்தப்பட்டது என்றாலும், பொருளாளரின் கூடுதல் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காக அல்ல என்று சொன்னால் சரியல்ல. அறக்கட்டளை ஆவணத்திலுள்ள சட்டத்திட்டங்களுக்கு எதிராக நாங்கள் அந்த அறக்கட்டளையை நிர்வாகம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள கணக்கு பட்டியல்தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான், அது நீ.ம.சா.ஆ.1 வரிசை (11 ஆவணங்கள்). மேற்சொன்ன கணக்கு பட்டியல் தொடர்புடைய காசோலை புத்தகத்தின் அடிப்பகுதியை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், அது நீ.ம.சா.ஆ.2 வரிசை (40 ஆவணங்கள்). எங்களுடைய அறக்கட்டளை நடத்திவரும் கல்லூரிக்களுக்காக நாங்கள் வைப்பீடு செய்துள்ள தொகைகள் சம்பந்தமான விவரங்கள் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ளது, அது நீ.ம.சா.ஆ.3. அந்த நீ.ம.சா.ஆ.3 ஆவணத்தில் செய்யப்பட்டுள்ள வைப்பீட்டு தொகைகளில் இருந்து தேனா வங்கி மூலமாக எவ்வளவு கடன் பெற்றுள்ளோம் என்ற விவரம் என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ளது என்றால் சரிதான், அது நீ.ம.சா.ஆ.4. அறக்கட்டளைக்கு எவ்வளவு சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பதற்கான குறிப்பை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், அந்த குறிப்பு நீ.ம.சா.ஆ.5. ஒவ்வொரு கல்லூரி ஆரம்பிப்பதற்கும் குறைந்தபட்சமாக தேவைப்படும் நில அளவு குறித்து அரசு பரப்பை நிர்ணயித்துள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஒவ்வொரு கல்லூரி ஆரம்பிப்பதற்கும் தேவைப்படும் நிர்ணயிக்கப்படும் நில அளவு எவ்வளவு என்பது குறித்த குறிப்பு ../

தவறானது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் AICTE மற்றும் NCTE ஆகியவற்றிற்கு கொடுத்த பிரமாண பத்திரம்தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான், அது நீ.ம.சா.ஆ.6. மேற்சொன்ன ஆவணம் ஒரு கல்லூரிக்காக தாக்கல் செய்த பிரமாண பத்திரம் மட்டும்தான் என்றாலும், மற்ற எட்டு கல்லூரிகளுக்கு தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஒரே நிலத்தை மற்ற கல்லூரிகளுக்கும் காண்பித்து அனுமதி பெற்ற காரணத்தினால்தான் நில பயன்பாட்டுச் சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2005 முதல் 2008 வரை கலை கல்லூரியில் படித்த SC, ST மாணவர்கள் பட்டியல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், அது நீ.ம.சா.ஆ.7. 2011 முதல் 2013 வரை பாலிடெக்னிக் கல்லூரியில் படித்த SC, ST மாணவர்கள் பட்டியல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், அது நீ.ம.சா.ஆ.8. எங்கள் அறக்கட்டளை எந்தெந்த வங்கிகளில் கணக்கு வைத்துள்ளது என்ற பட்டியல் நீ.ம.சா.ஆ.9. நாங்கள் எழுத்துப்பூர்வமாக இல்லாமல் அறக்கட்டளையின் கல்லூரிகளை தனித்தனியாக பாகம் பிரித்துக்கொண்டு அறக்கட்டளையின் விதிகளுக்கு முரணாக வருமானத்தை சொந்த வருமானமாக மாற்றிக்கொண்டோம் என்றால் சரியல்ல. அதில் ஏற்பட்ட தகராறின் காரணமாக ஒரு குற்ற வழக்கு என் மனுவின் புகாரில் பதிவுசெய்யப்பட்டது என்றால் இல்லை. அதேபோல் பெரியண்ணனும், சிவக்குமாரும் என்மீது புகார் கொடுத்து அந்த புகாரில் நான் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளியே வந்தேன் என்றால் சரிதான். அதேபோல் நான் வாதியின்மீது ஒரு புகார் கொடுத்து வழக்கு பதிவுசெய்யப்பட்டு ../

விசாரணைக்குப் பின் அவர் நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டுவிட்டார் என்றால் சரியல்ல, வழக்கு தள்ளுபடிசெய்யப்பட்டது. வாதியின் வழக்கின்படி நான் இந்த அறக்கட்டளையின் அறங்காவலராக இருப்பதற்கு தகுதியில்லை என்று சொன்னால் சரியல்ல, அதேபோல் மற்ற நிர்வாகிகளுக்கும் தகுதியில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியுள்ளபடி தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**(மேற்சொன்ன நீதிமன்ற சான்றாவாணங்கள் 1 முதல் 9 வரையான ஆவணங்கள் வாதி கொடுத்த அறிவிப்பின்படி 1,2 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஒப்படைத்த ஆவணங்களை வாதி தரப்பு வழக்கறிஞர் பி.வா.சா.1–இன் குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களாகும். மேற்சொன்ன ஆவணங்களை குறியீடு செய்வதற்கு 1, 2, 3 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களால் ஆட்சேபனைக்குட்பட்டு அந்த ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.)**

**<u>மறுவிசாரணை</u> :** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.02.03 17:51:26 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.